## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணி சிறப்புப் பட்டக்கற்கை

## முதலாம் அரையாண்டு இறுதிப்பரீட்சை, வருடம் III- 2025

## LAW31209 – போட்டிச் சட்டம்

(2 ¼ மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 04

எவையேனும் **இரண்டு** (02) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நம்பிக்கைக்கு எதிரான/ போட்டிச் சட்டத்தின் மாதிரிகளின் (models of antitrust/competition law) முக்கிய அம்சங்களை விமர்சன ரீதியாக ஆராய்க. உமது விடையில், வரலாற்று வளர்ச்சிப்போக்கு, போட்டிக்கு எதிரான ஒப்பந்தங்கள் மற்றும் ஆதிக்க துஷ்பிரயோகத்திற்கான (anti-competitive agreements and abuse of dominance) அந்தந்த அணுகுமுறைகளில் உள்ள பிரதான ஒறுமைப்பாடுகள் மற்றும் வேறுபாடுகள், சந்தைப் போட்டியின் மீதான செல்வாக்கு மற்றும் பிற நாடுகளில் நம்பிக்கைக்கு எதிரான/போட்டிச் சட்ட (antitrust / competition law) அமைப்பை வடிவமைப்பதில் தாக்கம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துக.

(30 புள்ளிகள்)

2. "சந்தையின் ஆதிக்க நிலை சட்டவிரோதமானது அல்ல என்றாலும், அதன் துஷ்பிரயோகம் போட்டியை கணிசமாக சிதைத்து சந்தை ஒருமைப்பாட்டை பாதிக்கும்."

   மேற்கண்ட கூற்றின் பின்னணியில், நீர் விருப்பிய இரண்டு நியாயதிக்கங்களின் ஆதிக்க நிலை துஷ்பிரயோகத்திற்கான (abuse of dominant position) சட்டரீதியான உபசரிப்பை விமர்சன ரீதியாக ஆராய்க. தொடர்புடைய சட்ட விதிகள் மற்றும் வழக்குச் சட்டம் ஆகியவற்றினால் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(30 புள்ளிகள்)

3. இலங்கையில் போத்தலில் அடைக்கப்பட்ட நீரை வழங்கும் மூன்று முன்னணி விநியோகத்தவர்களான Aqua Pure, Blue Spring மற்றும் Cool Fresh ஆகியவை "நடபடி தடைகள்' (logistical constraints) என்பதனை முற்போட்டு ஒரே நேரத்தில் பாரிய பல்பொருள் அங்காடிகளுக்கான (major supermarkets) விநியோக அளவைக் குறைத்தன. இருப்பினும், ஊடகங்களுக்கு கசிந்த உள் குறிப்பொன்று நிறுவனங்கள் முறைசாரா முறையில் சந்தித்து செயற்கையான பற்றாக்குறையை உருவாக்கி திட்டமிட்ட விலை உயர்வை நியாயப்படுத்துவதற்காக விநியோகத்தைக் குறைக்க

ஒப்புக்கொண்டதாக குறிப்பிடுகின்றது. மூன்று நிறுவனங்களுக்கும் நாட்டினை தழுவிய பல்பொருள் அங்காடிகள் தொடர்களுக்கும் இடையிலான (key retail outlets) பிரத்தியேக விநியோக ஏற்பாடானது முக்கிய சில்லறை விற்பனை நிலையங்களிலிருந்து தங்களை விலக்கிவிட்டதாக சிறிய போட்டியாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நுகர்வோர் உரிமைகள் அமைப்பொன்று இந்த நடத்தை போத்தலில் அடைக்கப்பட்டநீர்ச் சந்தையை சிதைக்கும் நோக்கில் நியாயமற்ற போட்டி நடைமுறையொன்றை உருவாக்குவதாகக் குற்றம் சாட்டி நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் பின்னர் புகார் அளித்தது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் உள்ளக சட்ட ஆலோசகர் என்று உம்மை கருதி, இந்த நடத்தை 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் நியாயமற்ற போட்டி நடைமுறையின் எல்லைக்குள் வருகிறதா என்பது குறித்து அதற்கு ஆலோசனை வழங்குக. உமது பகுப்பாய்வை ஆதரிக்க மற்றும் தெளிவை அதிகரிக்க ஐரோப்பிய ஒன்றிய போட்டிச் சட்டத்திலிருந்து ஒப்பீட்டு நுண்ணறிவுகளை உமது விடையானது வழங்கியிருத்தல் வேண்டும்.

(30 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு (02) இனைப்பற்றி சிறு குறிப்புகள் எழுதுக:

a. தீங்கு விளைவிக்கும் கையகப்படுத்துதல்கள் மற்றும் இணைப்புகள் (Harmful acquisitions and mergers);
b. புலமைச்சொத்து சட்டம் மற்றும் போட்டிச் சட்டத்திற்கிடையிலான ஊடறுப்பு;
c. அரசு உதவி கட்டுப்பாடு;
d. கணனிமயப்படுத்தப்பட்ட சந்தைகளில் (digital marketing) நியாயமற்ற போட்டி நடைமுறைகள்; மற்றும்
e. போட்டிச் சட்டத்தின் பொருளாதார அடிப்படை.

(30 புள்ளிகள்)

*********